மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : "Individual farming" தனிப்பட்ட நபர்கள் சேர்ந்து ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் தனித்தனியாக நிலத்தை வைத்துக்கொண்டு எல்லோரும் சேர்ந்து ஒரு சங்கமாக அமைத்து, அந்த அமைப்பை நடத்துகிறார்கள். Joint farming அல்லது Collective farming என்பது எல்லோரும் சேர்ந்த நிலைமையில் இருப்பதால் சரியாக நடைபெறவில்லை என்று ஏற்கெனவே இருந்த அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. அந்த முடிவை ஏற்று செயல்படுத்தி வருகிறோம்.

Integration of Medical and Public Health Departments.

*218 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state —

(*a*) whether the two committees namely "Bhore Committee" and "A. L. Mudali r Committee" have submitted their reports on reformation of Medical and Health Departments.

(*b*) whether those reports have recommended the merger of Public Health Department with Medical Department ; and

(*c*) the decision taken by the Government on those reco - mendations ?

வைத்திய, சுகாதார இலாக்காக்களை இணைத்தல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வைத்திய, சுகாதார இலாகாக்கள் சீர்திருத்தம் பற்றி "போர் கமிட்டி" "ஏ. எல். முதலியார் கமிட்டி" என இரு கமிட்டிகள் தங்களது அறிக்கைகளை சமர்ப்பித்தனவா ?

(இ) அந்த அறிக்கைகளில் பொதுச்சுகாதார இலாக்காவை வைத்திய இலாக்காவுடன் இணைக்க சிபார்சு இருக்கிறதா ?

(உ) அந்த சிபார்சின்மீது அரசாங்கம் எடுத்த முடிவென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) and (இ) ஆம்.

(உ) இவ்விரண்டு இலாக்காக்களும் இப்போது இணைக்கப்பட்டுள்ளது.

திரு என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த "Bhore Committee A. L. Mudaliar Committee" இரண்டும் இந்த யோசனையை தவிர்த்து வேறு என்ன யோசனை சொன்னார்கள் ? அதில் முக்கியமான யோசனை என்ன ? அதில் என்னென்ன அமுல் படுத்தப் போகிறார்கள். ? இப்போது என்னென்ன அமுல் செய்து இருக்கிறார்கள். ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்லப்படும்.

Ottapidaram Water-supply Scheme.

*219. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the water-supply scheme for the villages in the area of Ottapidaram in Tirunelveli district has been sanctioned ;

(*b*) if so, whether Central grant will be given to this scheme ; and

(*c*) when this work will be taken up for execution ?